15.02.2022
O.S.No.192/2018

வா. சா. 1 ஜெயராஜ் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதிகளை கிரைய ஒப்பந்தம் எழுதும்போதே எனக்கு தெரியும். 15.4.2015 ம் தேதி கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதில் 3 வருட காலம் வாய்தா போட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். 15.04.2018 ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 வருடத்திற்குள் நான் நடவடிக்கை எடுக்காததால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு 10.10.2018 ம் தேதி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிராதில் மாற்றுப்பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். நான் கோவாப்ரேட்டிவ் டிபார்ட்டிமெண்டில் சேல்ஸ் மேனாக வேலை பார்த்து கடந்த 2013 கடைசியில் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் அரசாங்கத்திற்கு வருமானவரி செலுத்துபவர் இல்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் சொல்லியுள்ள முன்பணம் ரூ.10 லட்சம் எப்படி கிடைத்தது என்றால் பணி ஓய்வின்போது கிடைத்த பணமாகும். கிரைய சொத்து விவரத்தில் ஆர்சிசி லாகட வீடு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஒரு மாடி கட்டிடமாகும். லாகட வீட்டில் முதல் மாடி மட்டும் இல்லை என்றும் 2 வது மாடியும் உள்ளது என்றும் அதனால் சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிராது தாக்கல் செய்த தேதியில் தாவாச் சொத்தின் மதிப்பு ரூ.1 கோடிக்கும் மேல் போகும் என்றால் இல்லை. ரூ.15 லட்சத்திற்குத்தான் பேசினோம். 27.02.2018 ம் தேதி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்புக்கு 7.3.2018 ம் தேதி பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதை பிராதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 7.3.2018 ம் தேதி 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பை பெறாமல் நான் திருப்பி அனுப்பி விட்டேன் என்றால் நான் ஊரில் இல்லை. நான் ஊரில் இருந்துகொண்டே அறிவிப்பை வாங்காமல் இருந்தேன் என்றும் வேண்டும் என்றே அறிவிப்பை வாங்கவில்லை

என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் எனக்கு மட்டும் பதில் அறிவிப்பு அனுப்பாமல் 1 ம் வாதி மாயத்தேவர், தவமுருகன் ஆட்டோ பைனான்ஸ், தான்ய முருகன் ஆட்டோ பைனான்ஸ், சுகு ஆட்டோ பைனன்ஸ் ஆகியோர்களுக்கும் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த எதிர்வழக்குரைக்கு எவ்வித ஆட்சேபனையும் இன்றுவரை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் 3 ம் பிரதிவாதி இறந்த விவரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 3 ம் பிரதிவாதி இறந்த விவரம் தெரியும். 3 ம் பிரதிவாதி சதீஷ்குமாருக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் அந்த விவரம் தெரியாது. சதீஷ்குமாரின் மனைவி சரஸ்வதி அவர்களது மகன் விஷ்வா ஆகியோர்கள் பற்றி தெரியும் என்றும் அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சதீஷ்குமாருக்கு திருமணம் நடைபெற்ற விவரம் சொல்லி உள்ளார்கள் என்றும் அதன் பின்பும் நான் வழக்கில் அவர்களை தரப்பினர்களாக சேர்க்க மெமோ தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தற்சமயம் தான் எனக்கு 3 ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் உள்ள விவரம் எனக்கு தெரிய வந்தது. கிரைய ஒப்பந்தப்படி சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட வில்லை என்றால் சரிதான். பிராது, நிரூபண வாக்குமூலத்தில் 2 வது பாரா 14 வது வரியில் தாவாச்சொத்தைப் பொறுத்து பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் கிரையத்துக்காக போடப்பட்டது என்றும் கடனுக்காக போடப்பட்டது என்றும் அதனால்தான் எனக்கு முழு விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. 1, பிரதிவாதிகள் கடன் தொகை பெறுவதற்கு முன்பு அசல் பத்திரத்தை விசாலாட்சி சிட் பண்ட்சில் அடமானம் வைத்து ரூ.5 லட்சம் கடன் பெற்றிருந்தார்கள் என்றும் அந்த தொகையை வட்டியுடன் கட்டி அசல் பத்திரத்தை திருப்பினார்கள் என்றால் அந்த விவரம் தெரியாது. பிரதிவாதிகள் என்னிடம் ரூ.5 லட்சம் மட்டுமே கடன் பெற்று

உள்ளார்கள் என்றால் தவறு. பிரதிவாதிகள் கடன் கேட்டபோது என்னிடம் ஒரே சமயத்தில் ரூ.10 லட்சம் இல்லை என்பதால் என்னுடைய பார்ட்னர்களான தவமுருகன் ஆட்டோ பைனான்ஸ், தான்ய முருகன் ஆட்டோ பைனான்ஸ், சுகு ஆட்டோ பைனன்ஸ் ஆகியவை மூலம் பிரதிவாதிகளுக்கு தொகை கொடுத்து உள்ளார்கள் என்றால் பைனான்சுக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. பிரதிவாதிகள் வாங்கிய கடன் என்னிடமும், பைனான்சுக்கும் 6.1.2017 ம் தேதி கடன் தொகை முழுவதையும் கட்டி முடித்துவிட்டார்கள் என்றும் பிரதிவாதிகளை பழிவாங்கவேண்டும் என்றும் அவர்களின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் வாங்கிய அசல் வட்டி ஆகியவற்றை செலுத்தியதால்தான் 3 வருட காலத்திற்குள் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அசல் பத்திரத்தை பிரதிவாதிகள் கேட்டபோது 31.3.2018 ம் தேதிக்குள் வருடாந்திர கணக்கு முடிந்த பின்னர் அசல் பத்திரத்தை திருப்பி கொடுப்பதாகவும் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுப்பதாகவும் பிரதிவாதிகளிடம் வாய்மொழியாக கூறியதால்தான் 3 வருட காலக்கெடுவுக்குள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் தெரிந்து கொண்டுதான் பிரதிவாதிகள் அனுப்பிய அறிவிப்பை வாங்காமல் வெளியூரில் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வீட்டின் அசல் பத்திரங்கள் என் வசம்தான் உள்ளது. அந்த பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரையம் முடிக்கும்போதுததான் அசல் பத்திரத்தை ஒப்படைப்பார்கள் என்றும் பிரதிவாதிகள் கடனாக வாங்கியதால்தான் அசல் பத்திரங்களை என் வசம் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. 3 வருட காலத்திற்குள் கிரையம் முடிக்க ஒருபோதும் தயாராக இல்லை என்பதால்தான் நான் 3 வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சதீஷ்குமார் இறந்ததற்காக திருத்தல் மனு தாக்கல் செய்தேன் என்றும் அதில் அ பரிகாரத்தில் பாக்கி தொகை ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டு கிரையம் முடித்துக் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனுக்காக பிரதிவாதிகள்

பெற்ற தொகையை என்னிடம் செலுத்தி விட்டதால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை வழக்கில் சேர்க்காமல் தாவா தாக்கல் செய்துள்ளதால் அவசியமான தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல. மாயத்தேவரும் நானும் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்தோம். மாயத்தேவர் 7.3.2018ம் தேதிய அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்ற விவரத்தை பிராதில் கூறவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அவர் எனக்கு அந்த விவரத்தை தெரிவிக்கவில்லை. 1ம் பிரதிவாதி நாகராஜனின் வாரிசுகள் 2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2,3ம் பிரதிவாதிகளின் இன்சியல் தவறுதலாக உள்ளது என்று பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறியும் நான் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். காமாட்சி நகர், புதுஅக்ரஹாரத்தில்தான் தவமுருகன் ஆட்டோ பைனான்ஸ், தான்ய முருகன் ஆட்டோ பைனான்ஸ், சுகு ஆட்டோ பைனன்ஸ் உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி நபர்களை விசாரித்தால் பிரதிவாதிகள் கடனுக்காகத்தான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. பிராது தாக்கல் செய்ய எனக்கும் 1ம் வாதிக்கும் எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல. பிராதில் சொல்லி உள்ள வழக்குமூலம் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

M K JAMUNA Digitally signed by M K JAMUNA Date: 2022.02.17 17:12:16 +0530

Prl.Sessions Judge,
Dindigul